இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 38 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 31 – வியாழக்கிழமை 17 செப்டம்பர் 2026 – திருச்சி ★★ 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 38 : Thiruvalluvar Year - 2057 - Aavani 31 - Thursday 17 September 2026 - Trichy ★★ 10 Pages ₹ 5.00

## தலைநிமிர்ந்த தமிழர்! தலைநிமிர்ந்த தமிழ்நாடு! என்ற இலட்சியத்தை நனவாக்க -

# தமிழன்னைக்குப் பெயரிட்ட மாபெரும் தமிழ்க் கனவு பேரறிஞர் அண்ணா!

## 118–ஆவது பிறந்த நாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!



சென்னை, செப். 17 –

**தலைநிமிர்ந்த தமிழர்! தலைநிமிர்ந்த தமிழ்நாடு! என்ற இலட்சியத்தை நனவாக்க தமிழன்னைக்குப் பெயரிட்ட மாபெரும் தமிழ்க் கனவு பேரறிஞர் அண்ணா அவர்கள் என்று அவரது 118-ஆவது பிறந்த நாளையொட்டி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளத்தில் புகழாரம் சூட்டியுள்ளார்.**


இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-


**தமிழ்நாட்டின் அரசியல் இலக்கணத்தை எழுதிய பேரறிஞர் அண்ணாவுக்குப் புகழ் வணக்கம்!**

**தலைநிமிர்ந்த தமிழர்! தலைநிமிர்ந்த தமிழ்நாடு! என்ற இலட்சியத்தை நனவாக்கத் தமிழன்னையின் தனயனாகப் பிறந்து தாய்க்குப் பெயரிட்ட மாபெரும் தமிழ்க் கனவு அவர்!**

**பேரறிஞர் அண்ணா சுயமரியாதையில் -சமூக நீதியில் - மாநில உரிமையில் - தமிழ்ப் பற்றில் என்றென்றும் வாழ்வார்!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.






## ‘டம்மி’ முதல்வர் விஜய்யின் துறையிலேயே ஊழலோ ஊழல்!

# ஜூலையில் திறந்த சிலைக்கு ஆகஸ்ட்டில் டெண்டர்!

## லஞ்ச ஒழிப்புத் துறையினரிடம் புகார்!

சென்னை, செப். 17–

த.வெ.க ஆட்சியில் ஜூலையில் திறந்த சிலைக்கு ஆகஸ்டில் டெண்டர் விடப்பட்டுள்ளதாக அறப்போர் இயக்கம் குற்றம்சாட்டி உள்ளது. இது தொடர்பாக அறப்போர் இயக்கம் வெளியிட்டுள்ள சமூக வலைதள வீடியோவில், “தாம்பரம் மாநகராட்சியில் டெண்டர் சட்ட விதியை அப்பட்டமாக மீறி, டெண்டர் கோரப்படும் முன்பே கூட்டுசதி செய்து பணிகளை முடித்து திறப்பு விழா செய்துள்ள மிகப்பெரிய முறைகேட்டை அறப்போர் இயக்கம் தகுந்த ஆதாரங்களுடன் வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறது.

ஜூலை மாதம் அமைச்சர் சரத்குமார் பெருங்களத்தூர் ரவுண்டானாவில் அசோகா பில்லர் சிலையை திறந்து வைத்தார். ஜூலை 29ஆம் தேதி இது தொடர்பாக அமைச்சர் சரத்குமார் அவரது சமூக வலைதளத்தில் பதிவு வெளியிட்டு உள்ளார். ஆனால், இந்த அசோகா பில்லருக்கான டெண்டரே ஆகஸ்ட் 6ஆம் தேதி தான் போடப்பட்டு உள்ளது.

எல்லா வேலையும் முடிக்கப்பட்ட பின்னர் ஆகஸ்ட் 6ஆம் தேதி தான் இதற்கான டெண்டர் கோரப்பட்டு ஆகஸ்ட் 26ஆம் தேதி தான் டெண்டர் முடிக்கப்படுவது போல காட்டப்பட்டு உள்ளது. இந்த டெண்டருக்கான வேலைகளை 2 மாதத்தில் முடிக்க வேண்டும் என்று டெண்டர் இன்வைட்டிங் அத்தாரிட்டி தாம்பரம் ஆணையர் பாலச்சந்தர் ஐ.ஏ.எஸ் குறிப்பிட்டு உள்ளார்.

இதுமட்டும் அல்ல சிட்லபாக்கம் ரவுண்டா பக்கத்தில் ஆகஸ்ட் 10ஆம் தேதி ஒரு சிலை திறந்து வைத்திருக்கிறார்கள். இந்த சிலைக்கு டெண்டர் கோருவது ஆகஸ்ட் 6ஆம் தேதி, ஆகஸ்ட் 24ஆம் தேதி வரைக்கும் ஒப்பந்ததாரர்கள் போட்டி போடலாம். ஆகஸ்ட் 24ஆம் தேதிக்கு பின் ஒருவருக்கு டெண்டர் கொடுக்கப்படும். இதில், முன்னாடியே கூட்டு சதி செய்து ஒப்பந்ததாரரை முடிவு செய்துவிட்டனர்.

கிட்டத்தட்ட 45 லட்சம் ரூபாய்க்கான டெண்டர்களை முதலிலேயே முடிவு செய்து ஒப்பந்த தாரர்களுடன் சேர்ந்து கூட்டு சதி செய்துள்ளார். இப்போது கணக்கு காட்டுவதற்காக டெண்டர்கள் போடப்பட்டு உள்ளது.

ஊழலற்ற நிர்வாகத்தை வழங்குவோம் என உறுதியளித்து வந்த புதிய த.வெ.க அரசின் கீழ், இதுபோன்ற டெண்டர் முறைகேடுகள் செய்வது அதிர்ச்சியளிக்கிறது.

இது குறித்த புகாரை அறப்போர் இயக்கம் முதல்வர், லஞ்ச ஒழிப்பு துறை உள்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி உள்ளது.





பேரறிஞர் அண்ணா அவர்களின் 118 வது பிறந்தநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் காலை, சென்னை, வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப்பொதுச் செயலாளர்கள் கனிமொழி கருணாநிதி எம்.பி., ஆ.இராசா எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தங்கம் தென்னரசு, இராஜகண்ணப்பன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு உள்ளிட்ட கழக முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் கழக நிர்வாகிகள் திரளாகப் பங்கேற்றனர்.